## செயற்பொறியாளர், நீஆது., வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: *பொறி. சு.லீலாவதி, பி.இ.,*
செயற்பொறியாளர், நீ.ஆ.து., (கூ/பொ)

* * *

**செயல்முறை கடித எண். நிஉ 2 / 27/2021 / நாள்.22.02.2022**

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – திரு.கோ.நாராயணசாமி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : முதன்மை தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்.3(3)/35935 /2020/நாள்.17.09.2020.

* * *

பார்வையில் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டி தேர்வு தொகுதி IV–ல் அடங்கிய 2018–2019 மற்றும் 2019–2020–ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பணியமர்வு செய்யப்பட்ட திரு.கோ.நாராயணசாமி, 15.10.2020 முற்பகலில் நீர்ப்பிரிகை மேலாண்மை வாரிய உபகோட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியேற்று, தொடர்ந்து பணிபுரிந்து மாறுதலில் இக்கோட்ட அலுவலகத்தில் 01.12.2021 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அவருக்கு தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதி 23 (எ) (1)–ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 15.10.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், இவர் மூன்று ஆண்டுகால தேர்ச்சி பணியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இந்த பணிவரன்முறை ஆணை சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

லீலாவதி 22/02/2022

செயற்பொறியாளர், நீஆது.,(கூ/பொ)
வைப்பாறு வடிநில கோட்டம்,
விருதுநகர்.

22.02.22.

பெறுநர்
திரு.கோ.நாராயணசாமி,
இளநிலை உதவியாளர்,
வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர்.